**Hallo
Basel-Stadt**

Kanton Basel-Stadt

# தெரிந்துகொள்ள வேண்டியவை

முதல் படிகள்
திறந்திருக்கும் நேரங்கள் / விடுமுறை நாட்கள்
வதிவிட உரிமை அடையாளக்குறி மற்றும் உள்நாட்டு குடிமையாக்கம்
தனியார் பொறுப்புக் காப்பீடு
மதுபானம் / புகையிலை / போதைப் பொருட்கள்
வீட்டு மிருகங்கள்
சுவிட்சர்லாந்தில் ஒன்றிணைந்து வாழ்தல்

# முதல் படிகள்

Kanton Basel-Stadt-ல் புதிதாக வந்துள்ளீர்களா? பின்னர் நீங்கள் 14 நாட்களுக்குள் குடியிருப்பாள் பதிவு அலுவலகத்தில் பதிவு செய்ய வேண்டும். குடியிருப்போர் பதிவு அலுவலகத்தில் நேரில் பதிவு செய்யும்போது புதிதாக வந்தவர்கள் பிரத்யேக வரவேற்பு உரையைப் பெறுகின்றனர்.

## அதிகாரப்பூர்வ பதிவு

Kanton Basel-Stadt மாநிலத்தில் புதிதாக குடி புகும் அனைத்து மக்களும் 14 நாட்களுக்குள் அவர்கள் வசிக்கும் இடத்தில் (Basel, Riehen அல்லது Bettingen) குடியிருப்பாளர் பதிவு அலுவலகத்தில் பதிவு செய்ய வேண்டும்.
நீங்கள் சுவிட்சர்லாந்தைச் சேர்ந்தவர் அல்லது ஐரோப்பிய ஒன்றியத்தில் (EU) உள்ள நாடு அல்லது ஐரோப்பிய சுதந்திர வர்த்தக சங்கத்தில் உள்ள (EFTA) நாட்டைச் சேர்ந்தவர்: நீங்கள் எழுத்துப்பூர்வமாக E-Umzug CH வழியாகவோ அல்லது Basel-Stadt, Riehen அல்லது Bettingenஇல் உள்ள குடியிருப்பாளர் பதிவு அலுவலகத்தில் நேரிலோ பதிவு செய்யலாம்.
நீங்கள் ஐரோப்பிய ஒன்றியத்தில் (EU) உள்ள நாட்டை அல்லது ஐரோப்பிய சுதந்திர வர்த்தக சங்கத்தில் (EFTA) உள்ள நாட்டைச் சேர்ந்தவர்கள் அல்ல எனில்:
ஷ்பீகல்ஹோஃப் வாடிக்கையாளர் மையத்தில் உள்ள குடியிருப்பாளர் பதிவு அலுவலகத்திற்கு (Einwohneramt) வாருங்கள். அங்கு உங்கள் பயோமெட்ரிக் தரவை நாங்கள் சேகரிக்க வேண்டும். பதிவு செய்ய நீங்கள் கட்டணம் செலுத்த வேண்டும்.
முகவரி இதுதான்:

Kundenzentrum Spiegelhof
Spiegelgasse 6
4001 Basel
Tel. 061 267 70 60
நீங்கள் பதிவு செய்ய என்னென்ன தேவை?
எந்தெந்த ஆவணங்களை உங்களுடன் எடுத்துச் செல்ல வேண்டும் என்பதை முன்கூட்டியே தெரிந்துகொள்ளவும்.
ஆவணங்கள் ஜெர்மன், பிரெஞ்சு, இத்தாலியன் அல்லது ஆங்கிலத்தில் இருக்க வேண்டும்.
உங்களுக்கு நிச்சயமாக இந்த ஆவணங்கள் தேவைப்படும்:

- பதிவுப் படிவம் (Anmeldeformular). நீங்கள் முன் பதிவுப் படிவத்தைப் பூர்த்தி செய்ய வேண்டும்.
- உங்கள் செல்லுபடியாகும் பயண கடவுச்சீட்டு அல்லது அடையாள அட்டையின் வண்ண நகல் (EU/EFTAக்கு)
- உங்கள் வாடகை ஒப்பந்தம் அல்லது குடியிருப்பு அனுமதியின் நகல்

உங்களுக்கு இந்த ஆவணங்களும் தேவைப்படலாம்:

- விசா நுழைவு அனுமதி

- பணி ஒப்பந்தம்
- குற்றப் பதிவு அறிக்கை
- திருமணச் சான்றிதழ்
- ஒருவேளை இன்னும்

நீங்கள் இந்த மாநிலத்திற்குள் இடம்பெயர்ந்தாலோ அல்லது பாசில்-ஷ்டட் மாநிலத்தை விட்டு வெளியே இடம் பெயர்ந்தாலோ குடியிருப்பாளர் பதிவு அலுவலகத்தில் இதைப் பதிவு செய்ய வேண்டும்.
நீங்கள் ஐரோப்பிய ஒன்றியத்தில் (EU) உள்ள நாடு அல்லது ஐரோப்பிய சுதந்திர வர்த்தக சங்கத்தில் (EFTA உள்ள நாட்டைச் சேர்ந்தவர் அல்ல ஆனால் ஏற்கனவே சுவிட்சர்லாந்தில் வசிக்கிறீர்கள் எனில்: நீங்கள் வேறு மாநிலத்திலிருந்து பாசில்-ஷ்டட் மாநிலத்திற்கு மாறுவதானால், செல்லும் முன் இடம்பெயர்வு அலுவலகத்தில் ஒப்புதலை பெறவும். அதன் பின்னரே இங்கு பதிவு செய்ய முடியும்.

## வரவேற்புரை

நீங்கள் பதிவு செய்ய குடியிருப்போர் பதிவு அலுவலகத்திற்கு செல்லும் போது தனிப்பட்ட நேர்காணல் இருக்கும். அங்கு நாங்கள் உங்களை வரவேற்கிறோம், உங்கள் கேள்விகளுக்கு பதில் அளித்து பாசில் வாழ்க்கை முறையைப் பற்றி உங்களுக்குச் சொல்கிறோம்.

## மேலதிகத் தகவல்கள் (இணைப்புகள், விலாசம், பிரசுரம், அறிவித்தல்)

www.hallo-baselstadt.ch/ta/good-to-know/first-steps

# திறந்திருக்கும் நேரங்கள் / விடுமுறை நாட்கள்

சுவிஸில் அதிகமான கடைகள் ஞாயிற்றுக்கிழமைகளில் பூட்டியிருக்கும். இதற்கு புகையிரத நிலையத்திலுள்ள கடைகள் மட்டும் விதிவிலக்காகும். சட்டப்படியான விடுமுறை நாட்களை மாநிலமே ஒழுங்கு செய்யும்.

## விடுமுறை நாட்கள்

விடுமுறை நாட்கள் தொழிற்சட்டத்தில் ஒழுங்குபடுத்தப்பட்டுள்ளன மேலும் அவை சட்டபூர்வமாக ஞாயிற்றுக்கிழமைக்கு சமமானவை. 1 ஆகஸ்ட் (தேசியவிடுமுறை நாள் ) சுவிஸ் முழுவதற்குமான சட்டப்படியான விடுமுறைநாள். அதை விட ஒவ்வொரு மாநிலத்திற்கும் 8 மேலதிகமான சட்டப்படியான விடுமுறை நாட்கள் உள்ளன. Basel-Stadtமாநிலத்தில் பின்வரும் நாட்கள் பொது விடுமுறை நாட்களாகும்: புதுவருடம் (1. ஜனவரி) பெரியவெள்ளி (ஈஸ்ரருக்கு முந்தைய வெள்ளி), ஈஸ்ரர் திங்கள், தொழிலாளர் தினம் (1. மே), மோட்சத்திருநாள் (ஈஸ்ரர் திங்களுக்கு 40 நாட்களின் பின்புவரும் வியாழன்), வெள்ளைத் திங்கள், தேசிய விடுமுறைநாள் (1. ஆகஸ்ட்), கிறிஸ்துமஸ் (25. டிசம்பர்), ஸ்டீபன் நாள் (26. டிசம்பர்).

## கடைகள் திறந்திருக்கும் நேரங்கள்

கடைகள் திறந்திருக்கும் நேரங்கள் மாநிலத்திற்கு மாநிலம் வேறுபடும். Basel-Stadt மாநிலத்தில், கடைகள் திங்கள் முதல் வெள்ளி வரை காலை 6 மணி முதல் இரவு 8 மணி வரை திறந்திருக்க அனுமதிக்கப்படுகிறது. இருப்பினும், இந்த நேரங்கள் கடையைப் பொறுத்து மாறுபடலாம் மற்றும் குறுகியதாக இருக்கலாம். சனிக்கிழமைகளில் கடையை வார நாட்களைவிட முன்பே பூட்டுவார்கள். பெரும்பாலும் மாலை 6 மணிக்கு. ஞாயிற்றுக்கிழமைகளில் அதிகமான கடைகள் பூட்டியிருக்கும். விதிவிலக்காகப் புகையிரதநிலையக் கடைகள், பெட்ரோல் நிலையக் கடைகள் அல்லது உள்ளூர் கடைகள். இவை சாதாரணமாக 7 நாட்களும் திறந்தும் மற்றைய கடைகளைவிட அதிகமாக முந்தித்திறந்தும் பிந்திப்பூட்டியும் இருக்கும்.

## அரச நிர்வாகங்கள் திறந்திருக்கும் நேரங்கள்

மாநில நிர்வாகங்கள் வழமையாக திங்கள் முதல் வெள்ளி 8 -12 மணி வரையும் 14 -17 மணி வரையும் திறந்திருக்கும். சில இடங்கள் பிற்பகல் 13.30 மணிக்குத் திறந்தும் அல்லது தொலைபேசியில் கூடிய நேரத்திற்கு தொடர்பு கொள்ள வசதியுமிருக்கும். முதலே இணையத்திலோ அன்றி தொலைபேசியிலோ திறந்திருக்கும் நேரங்கள் பற்றி அறிந்து கொள்ளச் சொல்லிப் பரிந்துரைக்கப்படுகிறது.

## மேலதிகத் தகவல்கள் (இணைப்புகள், விலாசம், பிரசுரம், அறிவித்தல்)

www.hallo-baselstadt.ch/ta/good-to-know/opening-hours--holidays

# வதிவிட உரிமை அடையாளக்குறி மற்றும் உள்நாட்டு குடிமையாக்கம்

நீண்ட காலத்திற்கு சுவிஸில் வாழ்ந்து வேலை செய்வதாயின் ஒரு அனுமதிப்பத்திரம் தேவை. பல தரப்பட்ட வதிவிட உரிமைகளுக்கும் நிரந்தர வதிவிட உரிமைக்கும் வித்தியாசங்கள் உண்டு.

## அனுமதி வகைகள்

எவர் சுவிஸில் தங்கியுள்ள காலப்பகுதியில் வேலை செய்கிறாரோ அன்றி 3 மாதத்திற்கு மேல் தங்குகிறாரோ அவருக்கு ஒரு அனுமதி தேவைப்படுகிறது. இது மாநில இடம்பெயர்வு அலுவலகத்தால் (Migrationsamt) வழங்கப்படும். இவை குறுகியகாலத் தங்குமிட அனுமதி (1 வருடம் வரை), தங்குமிட அனுமதி ( கால எல்லையுடன்) மற்றும் நிரந்தர வதிவிட உரிமை (காலவரையற்றது) மற்றும் எல்லைப்புற தொழிலாளர்கள் அனுமதி என வித்தியாசப்படுகின்றன.

- குறுகிய வதிவிடஉரிமை (L) இந்த அனுமதி உள்ளவர்கள் குறிப்பிட்ட கால எல்லை வரை (அதிகமாக 1 வருடம்) முக்கிய காரணத்தையிட்டு சுவிஸில் வாழலாம். அதிகமான EU/EFTA நாட்டுப் பிரஜைகள் வேலை வாய்ப்புக் கிடைத்தால் 3 மாதம் முதல் ஆதாரத்துடன் (வேலைப்பத்திரம்)1 வருடம் வரை இருக்கலாம்.
- வதிவிட உரிமை (B) இந்த அனுமதி உள்ளவர்கள் நீண்ட காலம் சுவிஸில் தங்கலாம். EU/EFTA நாட்டுப் பிரஜைகள் தமக்கு 1 வருடத்திற்கு மேற்பட்ட வேலைப்பத்திரம் உள்ளது என ஆதாரம் காட்டினால் அவர்கள் 1 வருடத்திற்கு மேலாக வேலை செய்ய முடியும். EU/EFTA நாட்டுப்பிரஜைகளிற்கான அனுமதி 5 வருடங்களிற்கு வழங்கப்படுகிறது. மற்றைய நாட்டவர்களுக்கு 1 வருடத்திற்கு வழங்கப்படுகிறது. அதன்பின்பு அவர்கள் விசா நீடிப்புக்கு விண்ணப்பிக்க வேண்டும். இந்த விசா நீடிப்பு எதாவது நிபந்தனைகளையொட்டி கிடைக்கலாம். உதாரணமாக டொச் வகுப்புக்குப் போதல். சில சமயம் ஏதாவது குற்றச் செயல்களில் ஈடுபட்டிருந்தால் அல்லது சமூக உதவியைச் சார்ந்திருந்தால் வர வேண்டிய விசா நீடிப்பு தடைப்படலாம். ஆறு மாதங்களுக்கு மேல் தடையின்றி வெளிநாட்டில் தங்கியிருந்தால், குடியிருப்பு அனுமதி காலாவதியாகிவிடும். அங்கீகரிக்கப்பட்ட அகதிகளுக்கும் B வதிவிட அனுமதி கிடைக்கும்.
- நிரந்தர வதிவிட அனுமதி (C) சுவிஸில் 5 அல்லது 10 வருடங்கள் கடந்தும் தொடர்ந்து வசித்தால் இந்த அனுமதி கிடைக்கும். இங்கேயும், EU / EFTA நாடுகள் மற்றும் மூன்றாம் நாடுகளைச் சேர்ந்தவர்களுக்கு வெவ்வேறு நிபந்தனைகள் விதிக்கப்படுகிறது. நீங்கள் வெளிநாட்டிற்குச் சென்றால், உங்கள் நிரந்தர வதிவிட அனுமதிப்பத்திரத்தை சில நிபந்தனைகளின் கீழ் அதிகபட்சம் நான்கு ஆண்டுகளுக்கு வைத்திருக்கலாம். இதற்காக, இடம்பெயர்வு அலுவலகத்திற்கு விண்ணப்பம் செய்யப்பட வேண்டும்.
- தற்காலிக வதிவிட அனுமதி (F ) அகதி அந்தஸ்து தேடிக் கிடையாதோருக்குத் தற்காலிக வதிவிட அனுமதி கிடைக்கும். இந்த அனுமதி ஒவ்வொரு வருடமும் புதுப்பிக்க வேண்டும்.

## வெளிநாட்டவர் அடையாளஅட்டை

சுவிஸில் வதியும் வெளிநாட்டவர்கள் வெளிநாட்டவர்களுக்குரிய அடையாள அட்டையைப் (Ausländerausweis) பெற்றுக்கொள்வார்கள். அடையாள அட்டையின் வகை பல்வேறு நிபந்தனைகளைக் கொண்டுள்ளது. வெளிநாட்டில் இருந்து ஜெர்மனிக்கு செல்பவர்கள் கிரெடிட் கார்டு வடிவில் உயிரியல் அடையாள அட்டையை பெறுகிறார்கள். இந்த நோக்கத்திற்காக, பதிவின் போது கைரேகைகள் மற்றும் ஒரு படம் பதிவு செய்யப்படுகிறது. அடையாள அட்டை தொலைந்தால் அல்லது களவாடப்பட்டால் உடனே பொலிஸில் முறையிடவும். காவல்துறையின் இழப்பு அறிக்கை மற்றும் உங்கள் சொந்த நாட்டிலிருந்து உங்கள் கடவுச்சீட்டின் நகல் அல்லது உங்கள் அடையாள அட்டை (EU/EFTA க்கு) கொண்டு, நீங்கள் இடம்பெயர்வு அலுவலகத்தில் (Migrationsamt) ஒரு புதிய அடையாள அட்டைக்கு விண்ணப்பிக்கலாம்.

## நீடிப்புச் செய்தல்

தேசிய இனத்தைப் பொறுத்தும் தங்கும் நிலையைப் பொறுத்தும் வதிவிடஉரிமை வெவ்வேறு கால இடைவெளிகளில் நீடிப்புச் செய்து கொடுக்கப்படும். நீடிப்புச் செய்யவேண்டிய காலத்தில் ஒரு படிவத்தை நீங்கள் பெறுவீர்கள் (Verfallsanzeige). இந்தப் படிவம் பூர்த்தி செய்யப்பட்டு, வேலை வழங்குவோரால் உறுதிப்படுத்தப்பட்டு, பின்னர் உங்கள் தாய்நாட்டு பயண பாஸ்போர்ட் அல்லது அடையாள அட்டையின் நகலுடன் (EU/EFTA) இடம்பெயர்வு அலுவலகத்திற்கு (Migrationsamt) அனுப்பப்பட வேண்டும். ஏதாவது வினாக்களிருப்பின், இடம்பெயர்வு அலுவலகத்தை நாடுங்கள்.

## வழக்கமான உள்நாட்டு குடிமையாக்கம்

பத்து வருடங்கள் சுவிட்சர்லாந்தில் வசித்த எவரும் சுவிஸ் உள்நாட்டு குடிமையாக்கம் அனுமதிக்கு விண்ணப்பிக்கலாம். 8 முதல் 18 வயது வரை சுவிட்சர்லாந்தில் கழித்த ஆண்டுகளின் எண்ணிக்கை இரட்டிப்பாகும். குடியுரிமை காலம் பூர்த்தி செய்தல், ஜெர்மன் மொழியில் ஆதிக்கம், ஒருங்கிணைந்திருத்தல், கடன் அல்லது குற்றவியல் பதிவு இல்லாமல் இருத்தல் ஆகியவை உள்நாட்டு குடிமையாக்கத்திற்கான முக்கியமான முன்நிபந்தனைகள் ஆகும்.

## எளிதாக்கபட்ட உள்நாட்டு குடிமையாக்கம்

சில சட்ட நிபந்தனைகளின் கீழ், சுவிஸ் நாட்டினரின் வெளிநாட்டு வாழ்க்கைத் துணைவர்கள் மற்றும் சுவிஸ் பெற்றோரின் வாரிசுகளுக்கு எளிதாக்கபட்ட உள்நாட்டு குடிமையாக்கம் முதன்மையாகத் திறந்திருக்கும். எளிதாக்கப்பட்ட உள்நாட்டு குடிமையாக்கம் விஷயத்தில், மத்திய அரசு தனியாக உள்நாட்டு குடிமையாக்கத்தைத் தீர்மானிக்கிறது.

## மேலதிகத் தகவல்கள் (இணைப்புகள், விலாசம், பிரசுரம், அறிவித்தல்)

www.hallo-baselstadt.ch/ta/good-to-know/residence-permit

# தனியார் பொறுப்புக் காப்பீடு

ஒவ்வொரு வளர்ந்தோரும் ஒரு தனியார் பொறுப்புக் காப்பீடு செய்யவேண்டும். ஒருவர் மற்றவருக்குத் தவறுதலாகச் சேதத்தை ஏற்படுத்தினால் சேதம் விளைவித்தவருடைய காப்பீடு செலவைப் பொறுப்பெடுக்கும்.

## சொந்தப் பொறுப்பு

ஒருவர் மற்றவரைக் காயப்படுத்தினாலோ அல்லது மற்றவர் பொருட்களைச் சேதப்படுத்தினாலோ அதற்குரிய செலவுகளுக்கு அவரே பொறுப்பாகும். சேதங்கள் தவறுதலாக நடந்தாலும் கூட ஒரே நியதி தான். இந்தச் செலவுகள் மிக அதிகமாக இருக்கும். உதாரணத்திற்குப் பனிச்சறுக்கலின் போது யாரையாவது காயப்படுத்தினால் இநதச் சேதம் 100 ஆயிரம் பிராங்குகள்வரை இருக்கும்.

## தனியார் பொறுப்புக் காப்பீடு

ஒரு இழப்பு ஏற்படும் போது எதிர்கொள்ள வேண்டிய நிதி நெருக்கடியிலிருந்து தப்புவதற்கு தனியார் பொறுப்புக் காப்பீடு (Privathaftversicherung) செய்திருப்பது புத்திசாலித்தனம். இது அதிகமாகத் தனிப்பட்ட காப்புறுதி வசதிகளுக்குள் வரும். தனியார் பொறுப்புக் காப்பீடு பொதுவாக ஒரு வீட்டில் வாழும் அனைவருக்கும் ஒன்றாகச் சேர்த்துச் செய்யப்படும். இந்தக் காப்பீடு கட்டாயமாகச் செய்யப்பட வேண்டியது என்றில்லை. ஆனாலும் செய்வது நல்லது எனப் பரிந்துரை செய்யப்படுகிறது.

## காப்பீட்டுச் சேவைகள்

தனியார் பொறுப்புக் காப்பீடு காப்பீடு செய்தவரால் ஏற்படுத்தப்படும்; பொருட்கள் மனிதருக்குரிய சேதங்களின் செலவுகளைப் பொறுப்பெடுக்கும். அதன் கீழ் திருத்துவதற்குரிய செலவுகள் சுகமடையும் செலவுகள் சம்பள இழப்பு இழப்பீடு அல்லது வலிக்குரிய பணம் என்பன அடங்கும். தனியார் பொறுப்புக் காப்பீடு வீட்டு மிருகங்களால் ஏற்படுத்தப்படும் சேதங்களுக்கும் பொறுப்பெடுக்கும். ஒரே வீட்டில் வசிப்பவர்களால் சேதம் விளையுமானால் காப்பீடு பொறுப்பெடுக்காது. சேதங்களை வேண்டுமென்றோ அன்றி முரட்டுத்தனமாக ஏற்படுத்தினாலோ காப்பீடு பொறுப்பெடுக்காது.

## மேலதிகத் தகவல்கள் (இணைப்புகள், விலாசம், பிரசுரம், அறிவித்தல்)

www.hallo-baselstadt.ch/ta/good-to-know/personal-liability-insurance

# மதுபானம் / புகையிலை / போதைப் பொருட்கள்

போதைப் பொருட்கள் வைத்திருப்பது, பாவிப்பது அன்றி விற்பனை செய்வது தண்டணைக்குரியது. மதுபானம் புகையிலை வாங்குவதற்கும்; வயதெல்லை உண்டு.

## போதைப் பொருட்கள்

சட்டவிரோத போதைப்பொருட்கள் வைத்திருத்தல், விற்றல் அல்லது பாவித்தல் தண்டணைக்குரிய குற்றம். இது சிறிய அளவிற்கும் பொருந்தும். இதில் எவை சட்டவிரோதமாவை என்பது மருந்துப்பாவனைச்சட்டத்தில் (Betäubungsmittelgesetz) வரையறுக்கப்பட்டுள்ளது. போதைப்பொருட்களின் வணிக அடிப்படையான விற்பனையானது அதிகூடிய தண்டணைக்குட்படலாம்.

## மதுபானமும் புகையிலையும்

மதுபானமும் புகையிலையும் வாங்குவதற்கும் வயதெல்லை உண்டு. Basel-Stadt மாநிலத்தில் 16 வயதிற்குட்பட்ட சிறுவர்கள் மற்றும் இளையவர்களுக்கு மதுபானவகைகள் சிகரெட் வகைகள் விற்பனை செய்யக்கூடாது. சில மதுபானவகைகளை உம்: Spirituosen 18 வயதிற்கு மேற்பட்டவர்களுக்குத் தான் விற்பனை செய்யலாம்.

## புகைத்தலுக்குத் தடை

சுவிஸில் புகைத்தலுக்குத் தடை செய்யப்பட்ட விதம் ஒவ்வொரு மாநிலத்திற்கும் வித்தியாசப்படுகிறது. புகைத்தலால் சுற்றியுள்ளவர்களைப் பாதுகாக்கும் மத்திய அரசுச் சட்டம் மற்றும் மாநில விருந்தோம்பல் சட்டத்தை (Gastgewerbegesetz) Basel-Stadt மாநிலமும் ஆதரிக்கிறது. புகைத்தல் தடை செய்யப்பட்ட இடங்களாவன:

- மூடப்பட்ட பகிரங்க நுழைவாயில் கொண்ட இடங்கள் (வைத்தியசாலை, நிர்வாகக் கட்டிடங்கள், பாடசாலை, தொல்பொருட்காட்சியகம், சினிமா கொட்டகை, புகையிரதம், பஸ், கடைகள், கடைத்தொகுதிகள் )
- பலபேர் சேர்ந்து வேலை செய்யுமிடங்களில் புகைக்கக்கூடாது.

உணவகங்களின் அளவைப் பொறுத்து புகைத்தலுக்கு இடங்கள் ஒதுக்கப்பட்டுள்ளன. சில உணவகங்களில் தனி புகைக்கும் அறைகள் உள்ளன.

## மேலதிகத் தகவல்கள் (இணைப்புகள், விலாசம், பிரசுரம், அறிவித்தல்)

www.hallo-baselstadt.ch/ta/good-to-know/alcohol--tobacco--drugs

# வீட்டு மிருகங்கள்

எவர் வீட்டு மிருகங்கள் வைத்திருக்கிறாரோ அவர் பலவித விதிகளைக் கவனிக்க வேண்டும். சில மிருக வகைகளை எல்லாக் குடியிருப்புகளிலும் வைத்திருக்க முடியாது. நாய்கள் மாநிலத்தில் பதிவு செய்யப்பட வேண்டும்.

## வீட்டு மிருகங்களை வளர்த்தல்

எவர் வாடகை வீட்டில் குடியிருக்கிறாரோ அவர் கினி பன்றி, வெள்ளெலி, கனரிப்பறவை, மீன்கள் போன்ற சிறிய வீட்டு மிருகங்களை வளர்க்க முடியாது. பெரிய மிருகங்களான (சிறிய நாய், பூனை) ஆகியவற்றையும் வளர்க்கக்கூடாது எனவும் வாடகை ஒப்பந்தத்தில் சில வேளை போட்டிருக்கலாம். சத்தம் போடும் அல்லது ஆபத்து விளைவிக்கும் மிருகங்களையும் வீட்டுக்காரர் தடை செய்யலாம். அதை விட மிருகங்களை வளர்ப்பவர்கள் மிருகப்பாதுகாப்புச்சட்டத்தைக் கவனிக்கவேண்டும். உதாரணத்திற்குச் சில மிருகங்களைத் தனியே வளர்க்கக்கூடாது (முயல் ). வளர்க்கும் கூடுகள் குறைந்தபட்சத் தேவையையும் மற்றும் தேவையான வசதிகளையும் கொண்டிருக்க வேண்டும். அதிக வித்தியாசமான விலங்குகளை சுவிசிற்குள் கொண்டுவரமுடியாது. அதைவிட அதற்கு விசேடமான அனுமதி கால்நடை இலாகாவில் பெறவேண்டும்.

## நாய்கள்

**Basel-Stadt** மாநிலத்தில் நாய்களுக்கு விசேட சட்டமுண்டு. அதனுள் நாய் வளர்ப்பவர்களுக்கு என்ன பொறுப்புகள் உண்டு என எழுதப்பட்டுள்ளது. மேலதிக தகவல்களை மிருகவைத்தியரிடம் அறிந்து கொள்ளலாம்.

- சுவிஸில் எல்லா நாய்களுக்கும் ஒரு நுண்தகட்டில் அதன் அனைத்துத் தகவல்களும் பதியப்பட்டிருக்கும். நாய்க்கு ஒரு நாய் அடையாளஅட்டை (கிறடிட் காட் போல) இருக்கும். இது வீட்டு மிருகம் என்ற அடையாளத்திற்கு அல்ல. இந்த அட்டையுடன் ஐரோப்பிய நாடுகளுக்குள் நாயையும் கூட்டிச்செல்லலாம்.
- நாய்கள் மாநிலத்தில் பதிவு செய்யப்பட வேண்டும். இதற்கான ஆன்லைன் படிவமும் உள்ளது. வருடாந்திர வரிகளும் இதற்குப் பொருந்தும். ஒவ்வொரு நாயையும் வளர்ப்பதற்கு கட்டாயப் பொறுப்புக் காப்பீடு (Haftpflichtversicherung) எடுக்கப்பட வேண்டும்.
- நாயை வளர்ப்பவர் அதன் மலத்தை எடுத்து அப்புறப்படுத்த வேண்டும். யார் இதைச் செய்யாமல் விட்டாலும் அபராதப்பணம் மூலம் தண்டிக்கப்படுவர்.
- ஒரு சில நாய் இனங்களை ( பிட்புல். றொட்வைலர் ) வளர்க்க விசேட அனுமதி பெற வேண்டும்.
- நகர பூங்காக்கள் மற்றும் குழந்தைகள் விளையாட்டு மைதானங்களில் பொதுவாக நாய்கள் அனுமதிக்கப்படுவதில்லை. நாய்கள் சுதந்திரமாக இயங்கும் மண்டலங்கள் மற்றும் நாய் குளிக்கும் பகுதிகள் மண்டலத்தின் "வரைபட சேவையகத்தில்" குறிக்கப்பட்டுள்ளன.

## மேலதிகத் தகவல்கள் (இணைப்புகள், விலாசம், பிரசுரம், அறிவித்தல்)

www.hallo-baselstadt.ch/ta/good-to-know/pets

# சுவிட்சர்லாந்தில் ஒன்றிணைந்து வாழ்தல்

ஒவ்வொரு நாட்டிற்கும் அதன் கலாச்சார தனித்தன்மைகள் உள்ளன. சுவிட்சர்லாந்திலும், நீங்கள் தெரிந்து கொள்ள வேண்டிய சில பழக்கவழக்கங்கள் உள்ளன.

## பல வகையான கலாச்சாரங்கள்

சுவிட்சர்லாந்தில் பல்வேறு கலாச்சாரங்களும் மனநிலைகளும் உள்ளன. இதற்கு நான்கு தேசிய மொழிகளும் ஒரு காரணம். ஜெர்மன் மொழி பேசும் ஸ்விட்சர்லாந்தில் இயல்பானதாகக் கருதப்படும் ஒன்று பிரஞ்சு மொழி பேசும் ஸ்விட்சர்லாந்தில் முற்றிலும் மாறுபட்டதாக இருக்கும். நகரத்திற்கும் கிராமத்திற்கும் இடையிலான வேறுபாடுகள் பெரியதாக இருக்கலாம். ஆயினும்கூட, சுவிட்சர்லாந்தில் எல்லா இடங்களிலும் ஒரே மாதிரியான மரபுகள் உள்ளன.

## வணக்கம் தெரிவித்தல்

சுவிட்சர்லாந்தில் நாங்கள் ஒருவருக்கொருவர் இப்படித்தான் வணக்கம் செலுத்துகிறோம்: நாங்கள் வழக்கமாக ஒருவரையொருவர் கண்களைப் பார்த்து கைகுலுக்கிக் கொள்கிறோம். ஆண்களும் பெண்களும் கூட ஒருவருக்கொருவர் கண்களைப் பார்க்கிறார்கள். பாசில்-இல் நாங்கள் "கிரீட்சி" என்று கூறுகிறோம். மக்கள் ஒருவரையொருவர் நன்கு அறிந்தால், அவர்கள் "சாலி" அல்லது "ஹோய்" என்றும் கூறுவார்கள். கிராமப்புறங்களில், ஒருவரையொருவர் அறியாவிட்டாலும், தெருவில் பார்ப்பவருக்கு வணக்கம் செலுத்துகிறார்கள்.
சுவிட்சர்லாந்தில் பணிவு முக்கியமானது. அதனால்தான் நாம் அடிக்கடி "நன்றி" மற்றும் "தயவுசெய்து" என்று கூறுகிறோம். உதாரணமாக, கடையில் அல்லது உணவகத்தில், நாங்கள் "நன்றி" மற்றும் "தயவுசெய்து" என்று பல முறை கூறுகிறோம்.

## நேரம் தவறாமை

சுவிட்சர்லாந்தில், குறிப்பாக வேலை செய்யும் இடத்தில் காலம் தவறாமை மிகவும் முக்கியமானதாகும். நீங்கள் 5 நிமிடங்களுக்கு மேல் தாமதமாக வருவதாக இருந்தால், சரியான நேரத்தில் தகவல் அளிக்கவேண்டும். நீங்கள் யாரையாவது சந்திக்க விரும்புகிறீர்களா? பின்னர் முன்கூட்டியே சந்திப்பு நேரத்தை பேசி முடிவு செய்யுங்கள்.

## மறைமுகத் தொடர்பாடல்

நாங்கள் பொதுவாக விமர்சனங்களை நேரடியாக வெளிப்படுத்துவதில்லை. பெரும்பாலும், நாங்கள் ஒரு குறிப்பை மட்டும் கொடுக்கிறோம். இருப்பினும், மற்றவர் அந்த விமர்சனத்தைப் புரிந்து கொள்வார்கள் என்று நாங்கள் கருதுகிறோம். நீங்கள் ஜெர்மன் மொழியில் மொழியை இன்னும் நன்றாக அறியவில்லை என்றால் இதைப் புரிந்துகொள்வது உங்களுக்கு மிகவும் கடினமாக இருக்கும்.
நாங்கள் சில சமயம் மோதலைத் தவிர்க்கிறோம். உதாரணமாக உங்கள் அண்டைவீட்டார் உங்களால் தொந்தரவு அடைகிறார்களா? எனில் அவர்கள் உங்களிடம் தனிப்பட்ட முறையில் வந்து பேச்சுவார்த்தை நடத்தாமல் இருக்கலாம். பதிலாக அவர்கள் உங்களுக்கு ஒரு கடிதம் எழுதலாம் . நீங்கள் சரியாக புரிந்து கொண்டீர்களா என்று தெரியவில்லை எனில் மீண்டும் ஒருமுறை அவரிடம் கேட்பது நல்லது.

மேலதிகத் தகவல்கள் (இணைப்புகள், விலாசம், பிரசுரம், அறிவித்தல்)

www.hallo-baselstadt.ch/ta/good-to-know/coexistence-in-switzerland